ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477421 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நிதியியல் உளவறிதல் பிரிவு |
| திகதி | 2026.03.18 |

**பணம் தூயதாக்கல், பயங்கரவாதி நிதியளித்தல் மற்றும் ஆயுதப் பெருக்கத்திற்கு நிதியளித்தல் மீதான தேசிய இடர்நேர்வு மதிப்பீடு – 2024/2025 இன் நிறைவேற்றுச் சுருக்கத்தினை இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு வெளியிடுகின்றது**

அரசாங்க நிறுவனங்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் தனியார்துறை நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்கி மொத்தமாக 86 நிறுவனங்களின் கூட்டிணைப்புடன் பணம் தூயதாக்கல், பயங்கரவாத நிதியளித்தல் மற்றும் ஆயுதப் பெருக்கத்திற்கு நிதியளித்தல் மீதான தேசிய இடர்நேர்வு மதிப்பீடு – 2024/2025 அறிக்கையை இலங்கை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளது. இந்நிறுவனங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 200 நிபுணர்கள் இத்தேசிய பணிக்கு பங்களித்துள்ளனர். இது நாட்டின் மூன்றாவது தேசிய இடர்நேர்வு மதிப்பீடாவதுடன் இம்மதிப்பீட்டின் கீழ், நாட்டில் பணம் தூயதாக்கல், பயங்கரவாத நிதியளித்தல் மற்றும் ஆயுதப் பெருக்கத்திற்கு நிதியளித்தல் மீதான தேசிய இடர்நேர்வு மதிப்பீடு – 2024/2025, இடர்நேர்வுகளை அடையாளப்படுத்துவதை நோக்காகக் கொண்டிருந்தது. இலங்கை எதிர்கொள்கின்ற மிக முக்கிய பணம் தூயதாக்கல், பயங்கரவாத நிதியளித்தல் மற்றும் ஆயுதப் பெறுக்கத்திற்கு நிதியளித்தல் மீதான தேசிய இடர்நேர்வு மதிப்பீடு – 2024/2025 அறிக்கையானது அச்சுறுத்தல்கள், பாதிக்கப்படும்தன்மைகள் மற்றும் ஒட்டுமொத்த இடர்நேர்வு என்பவற்றை இம்மதிப்பீடு எடுத்துக்காட்டுகின்றது.

பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் வழிகாட்டல்களின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு இம்மதிப்பீட்டிற்கான ஒருங்கிணைப்பாளராகத் தொழிற்பட்டது. இம்மதிப்பீடானது பணம் தூயதாக்குதல் அச்சுறுத்தல், பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும்தன்மை, வங்கித்தொழில் துறை பாதிக்கப்படும்தன்மை, பிணையங்கள் துறை பாதிக்கப்படும்தன்மை, காப்புறுதித் துறை பாதிக்கப்படும்தன்மை, ஏனைய நிதியியல் துறை பாதிக்கப்படும்தன்மை, பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா தொழில்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் பாதிக்கப்படும்தன்மை, பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு, நிதியியல் வசதிக்குட்படுத்தல் உற்பத்தி இடர்நேர்வு, சூழல் மற்றும் இயற்கை வளங்கள் குற்றங்கள் இடர்நேர்வு, இலாப நோக்கற்ற அமைப்புகள் இடர்நேர்வு, சட்டரீதியான ஆட்கள் பற்றிய இடர்நேர்வு, சட்டரீதியான ஒழுங்கேற்பாடுகள் மற்றும் பயன்பெறு சொத்தாண்மை, மெய்நிகர் சொத்துக்கள் மற்றும் மெய்நிகர் சொத்துப் பணி வழங்குநர்கள் இடர்நேர்வு, வரிக் குற்றங்கள் மற்றும் ஆயுதப்பெருக்க நிதியளித்தல் இடர்நேர்வு என்பன உள்ளடங்கலாக 15 மையத் துறைகளின் கீழ் கொண்டுநடாத்தப்பட்டது.

பின்வரும் அம்சங்களை அது கூட்டிணைப்பதனால் மூன்றாவது இத்தேசிய இடர்நேர்வு மதிப்பீடு இலங்கைக்கு முக்கியமானதாக அமைகின்றது.

- பணம் தூயதாக்கல், பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடுகளுடன் சேர்த்து நாட்டின் முதலாவது ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் தேசிய இடர்நேர்வு மதிப்பீடு நடாத்தப்பட்டது;
- அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களைச் சேர்ந்த நிபுணர்களைக் கொண்ட வலுவான பல்வகை ஆர்வலர் பங்கேற்பு;
- வரிக் குற்றங்கள் மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு போன்றன புதிய மதிப்பீட்டுத்துறைகளாக உள்ளடக்கப்பட்டு 15 கூறுகளை உள்ளடக்கி நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டது.
- உலகளாவிய மற்றும் பிராந்திய பணம் தூயதாக்கல் பயங்கரவாத நிதியளித்தல், ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு பின்னணிகள் பற்றிய பரிசீலனை; அத்துடன்
- இடர்நேர்வு, அச்சுறுத்தல் மற்றும் பாதிக்கப்படும்தன்மை மட்டங்களுக்கான வரைவிலக்கணம் செய்யப்பட்ட பொருள்கோடல்கள் உள்ளடங்கலாக தெளிவான தரப்படுத்தப்பட்ட தரமிடல் கட்டமைப்பினைப் பயன்படுத்தல்

இலங்கையின் தேசிய பணம் தூயதாக்கல் இடர்நேர்வானது 1) தேசிய பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல் 2) தேசிய பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும்தன்மை என்பவற்றை மதிப்பிடுவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டது. முதன்மையாக முக்கிய வருவாய்களை ஈட்டுகின்ற சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளின் அடிப்படையில் (அடிப்படைத் தவறுகள்) இலங்கையின் ஒட்டுமொத்த தேசிய பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல் மட்டமானது நடுத்தரமானது ஆக மதிப்பீடு செய்யப்பட்டது. நாட்டின் ஒட்டுமொத்த பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும்தன்மையும் தேசிய முறியடித்தல் இயலுமை மற்றும் துறைக்கு குறிப்பான பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும் தன்மைகள் இரண்டையும் கருத்திற்கொண்டு, நடுத்தரமானது ஆக தரப்படுத்தப்பட்டது. அதற்கமைய, இலங்கையின் ஒட்டுமொத்த தேசிய பணம் தூயதாக்கல் இடர்நேர்வு முன்னைய மதிப்பீட்டிற்கு ஒத்திசைவாக நடுத்தரமானது ஆக தரப்படுத்தப்பட்டது.

பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல் மதிப்பீட்டின் கீழ், போதைப்பொருள் கடத்தலானது பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல் முன்னைய நடுத்தரம் - உயர்வான தரப்படுத்தலிருந்து **உயர்வானது** ஆக அதிகரித்தமை மூலம் மிகவும் தீவிரமான அடிப்படைத் தவறாக இனங்காணப்பட்டது. அதனைத்தொடர்ந்து, வர்த்தகம் அடிப்படையிலமைந்த பணம் தூயதாக்கல் உள்ளடங்கலாக மோசடி மற்றும் சுங்கம் என்பன காணப்பட்டு இவை **நடுத்தரம் மற்றும் உயர்வானது** ஆக மதிப்பீடு செய்யப்பட்டன. ஊழல் எண்ணப்பாங்குச் சுட்டெண்ணிற்கமைய, 2024ஆம் ஆண்டில் 121 ஆவது இடத்தில் (புள்ளிகள்: 32) இருந்து 2025ஆம் ஆண்டில் 107 ஆவது இடத்திற்கு (புள்ளிகள்: 35) அதிகரித்து இலங்கையின் தரவரிசையானது 14 இடங்களினால் முன்னேற்றமடைந்தது. இது இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான அச்சுறுத்தல்களின் மட்டம் குறைந்துள்ளதை தெளிவாகக் காட்டுகின்றது.

மேலும், கொள்ளை, சூழல், இயற்கை வளங்கள் குற்றங்கள், சட்டவிரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குறைப்படுத்தப்படாத மீன்பிடி தொடர்புபட்ட சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகள், ஆட்கடத்தல் மற்றும் வரிசார்ந்த தகவல்கள் என்பனவும் பணம் தூயதாக்கல் அச்சுறுத்தலின் **நடுத்தரம்** மட்டத்தினைக் கொண்டிருப்பதாகப் பதிவாகின. முதல் தடவையாக மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழான மீறல்கள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் **நடுத்தரம் - குறைவானது** ஆக தரப்படுத்தப்பட்டன. நாணயத்தை போலியாகப்புனைதல் முன்னைய மதிப்பீடுகளுக்கு ஒத்திசைவாக குறைவான அச்சுறுத்தல் மட்டத்தை தொடர்ந்தும் எடுத்துக்காட்டியது.

பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும்தன்மை மதிப்பீட்டின் கீழ், பணம் தூயதாக்கல் குற்ற வரைவிலக்கணத்தின் செயல்திறன்வாய்ந்ததன்மை, சொத்து பறிமுதல் சட்டங்களின் அனைத்தையும் உள்ளடக்கியதன்மை, நிதியியல் உளவறிதல் பிரிவு புலனாய்வு சேகரித்தல் தரம், நிதியியல் குற்றப்புலனாய்வாளர்களின் நேர்மை மற்றும் சுயாதீனம், நிதிசார் குற்ற வழக்குதொடுத்தல்களுக்கான இயலளவு மற்றும் வளங்கள், நிதிசார் குற்ற வழக்குத்தொடுப்பவர்களின் நேர்மை மற்றும் சுயாதீனம், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பின் செயல்திறன்வாய்ந்ததன்மை, பயன்பெறு சொத்தாண்மைத் தகவல்கள் கிடைக்கப்பெறும்தன்மையும் பெறுவழிகளும் உள்ளடங்கலாக பல மாறிலிகளைக் கருத்திற்கொள்வதன் மூலம் தேசிய முறியடித்தல் இயலுமை மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும், இம்மதிப்பீட்டின் கீழ் நிதிசாராத் துறைகளின் பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும்தன்மையும் கருத்திற்கொள்ளப்பட்டன.

நிதிசார் மற்றும் நிதிசாரா துறைகளுக்கான பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல்களையும் அத்துறைகளின் பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும் தன்மையும் கருத்திற்கொள்வதன் மூலம் பணம் தூயதாக்கல் இடர்நேர்வு மதிப்பீடுசெய்யப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட பணம் தூயதாக்கல் நோக்குகளுக்கு ஒப்பாக, நாட்டின் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு, அச்சுறுத்தல் மற்றும் பாதிக்கப்படும்தன்மை என்பனவும் மதிப்பீட்டின் போது மதிப்பீடுசெய்யப்பட்டன. இதற்கமைய, இலங்கையின் தேசிய பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு, பயங்கரவாத நிதியளித்தல் அச்சுறுத்தல் மற்றும் பாதிக்கப்படும்தன்மை என்பன நடுத்தரம் - உயர்வானது ஆக மதிப்பீடுசெய்யப்பட்டு, முன்னைய மதிப்பீட்டின் நடுத்தர மட்டத்திலிருந்து அதிகரிப்பொன்றைப் பிரதிபலித்தது. பன்னாட்டு நிதியியல் பாய்ச்சல்கள் மற்றும் குறிப்பிடத்தக்க உலகளாவிய பயங்கரவாத அச்சுறுத்தல்களைக் கொண்ட ஒரு சூழலில் இலங்கை அமைந்திருப்பதனால், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலிருந்தான அச்சுறுத்தல் மட்டமானது நடுத்தரம்-உயர்வானது மட்டத்திற்கு அதிகரித்துள்ளதுடன், இது இவ்விடர்நேர்வின் உயர்வடைதலுக்குப் பங்களிப்புச் செய்துள்ளது. அதேவேளை, பாதிக்கப்படும் தன்மை நடுத்தர மட்டத்தில் மாற்றமின்றி காணப்பட்டது.

நிதியியல் நிறுவனங்கள் மற்றும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் துறைகளுக்கிடையிலான பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு பின்வருமாறு;

| துறை | பணம் தூயதாக்கல் இடர்நேர்வு | பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு |
|---|---|---|
| **ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்கள்** | | |
| வங்கிகள் | நடுத்தரம் - உயர்வானது | நடுத்தரம் - குறைவானது |
| நிதிக் கம்பனிகள் | நடுத்தரம் - உயர்வானது | நடுத்தரம் - குறைவானது |
| பங்குத்தரகர்கள் | நடுத்தரம் | நடுத்தரம் - குறைவானது |
| முதனிலை வணிகர்கள் | நடுத்தரம் | நடுத்தரம் - குறைவானது |
| காப்புறுதிக் கம்பனிகள் | நடுத்தரம் | நடுத்தரம் - குறைவானது |
| பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் | நடுத்தரம் | நடுத்தரம் - குறைவானது |
| இ-பணி சேவை வழங்குநர்கள் | நடுத்தரம் - குறைவானது | நடுத்தரம் - குறைவானது |
| கூறு நம்பிக்கைகள் மற்றும் முதலீட்டு முகாமையாளர்கள் | நடுத்தரம் - குறைவானது | நடுத்தரம் - குறைவானது |
| கூட்டுறவுச் சங்கங்கள் | நடுத்தரம் - குறைவானது | நடுத்தரம் - குறைவானது |
| மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் | நடுத்தரம் - குறைவானது | நடுத்தரம் - குறைவானது |
| சமூர்த்தி வங்கிகள் | நடுத்தரம் - குறைவானது | நடுத்தரம் - குறைவானது |
| உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனிகள் | நடுத்தரம் - குறைவானது | நடுத்தரம் - குறைவானது |
| குத்தகைக்குவிடும் கம்பனிகள் | குறைவானது | நடுத்தரம் - குறைவானது |
| **ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நிதியியல் நிறுவனங்கள்** | | |
| முறைசாரா பணம் மாற்றல் பணிகள் | நடுத்தரம் - உயர்வானது | நடுத்தரம் |
| ஒழுங்குபடுத்தப்படாத நுண்பாகநிதி நிறுவனங்கள் | நடுத்தரம் - குறைவானது | நடுத்தரம் - குறைவானது |
| முறைசாரா அடகு பிடிப்போர் | நடுத்தரம் - குறைவானது | நடுத்தரம் - குறைவானது |
| முறைசாரா பணம் கடன்வழங்குநர்கள் | நடுத்தரம் - குறைவானது | நடுத்தரம் - குறைவானது |
| **பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள்** | | |
| உண்மைச் சொத்து | நடுத்தரம் - உயர்வானது | நடுத்தரம் - குறைவானது |
| அருமையான உலோகங்கள் மற்றும் கற்கள் வணிகர்கள் | நடுத்தரம் - உயர்வானது | நடுத்தரம் - குறைவானது |
| கெசினோக்கள் | நடுத்தரம் - உயர்வானது | நடுத்தரம் - குறைவானது |
| நம்பிக்கை பொறுப்பு மற்றும் கம்பனி பணி வழங்குநர்கள் | நடுத்தரம் | நடுத்தரம் - குறைவானது |
| சட்டத்தரணிகள் மற்றும் நொத்தாரிசுக்கள் | நடுத்தரம் | நடுத்தரம் - குறைவானது |
| கணக்காளர்கள் | நடுத்தரம் - குறைவானது | நடுத்தரம் - குறைவானது |

மேலே குறிப்பிடப்பட்டவற்றுக்கு புறம்பாக, சட்டப்பூர்வமான ஆட்கள் *(பணம் தூயதாக்கல் இடர்நேர்வு: நடுத்தரம் - உயர்வானது, பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு: நடுத்தரம்)* மற்றும் ஒழுங்கேற்பாடுகள் *(நடுத்தரம்)*, மெய்நிகர் சொத்து பணி வழங்குநர்கள் *(குறைவிலிருந்து நடுத்தரம்)*, நிதியியல் வசதிக்குட்படுத்தல் உற்பத்திகள்/பணிகள் *(குறைவிலிருந்து நடுத்தரம்)*, பயங்கரவாத நிதியளித்தலுக்கான துஷ்பிரயோகம் செய்யப்படும் இடர்நேர்விலுள்ள இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் வகைகள் (குறைவிலிருந்து நடுத்தரம்) போன்றவற்றுடன் தொடர்புடைய பணம் தூயதாக்கல்/பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வுகளையும் தேசிய இடர்நேர்வு மதிப்பீடு மதிப்பீடுசெய்தது.

மேலே குறிப்பிடப்பட்டவற்றுக்கு மேலதிகமாக, முன்னர் குறிப்பிட்டதைப் போன்று, ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் பற்றிய நாட்டினுடைய முதல் தேசிய இடர்நேர்வு மதிப்பீடு மதிப்பீடுசெய்யப்பட்டு **நடுத்தரம்** ஆக தரமிடப்பட்டு உலகளாவிய குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல் சூழலினதும் அடையாளங்காணப்பட்ட உள்நாட்டு பாதிக்கப்படும் தன்மையினதும் ஒருங்கிணைவைப் பிரதிபலித்தது.

தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டில் கண்டறியப்பட்டவைகளை அடிப்படையாகக் கொண்டு, 15 முக்கிய விதந்துரைப்புக்கள் ஆக்கப்பட்டன. இதற்கமைவாக, 2026 – 2030 காலப்பகுதிக்கான பணம்தூயதாக்கலுக்கெதிரான, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான இலங்கையின் தேசிய கொள்கை இற்றைப்படுத்தப்படும்.

தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டின் நிறைவேற்றுச் சுருக்கம்- 2024/2025 ஆனது (Sri_Lanka_NRA_on_ML_2024_25_Executive_Summary_T.pdf) என்ற நிதியியல் உளவறிதல் பிரிவின் இணையதளத்தில் கிடைக்கப்பெறுகின்றது.

அரசாங்க மற்றும் தனியார் துறை ஆர்வலர்கள் இருசாராரும் நாட்டின் தற்போதைய பணம் தூயதாக்கல்/பயங்கரவாத நிதியளித்தல்/ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு தோற்றப்பாட்டை நன்கு அறிந்துகொண்டு அவர்களின் நிறுவனம்சார்ந்த இடர்நேர்வு தணிப்பு உபாயங்களை வலுப்படுத்துவதற்கு இம்மதிப்பீடு முக்கியமானதொரு வளமாகும். உயர்ந்தளவான இடர்நேர்வு துறைகளைத் தணிப்பதற்கு அதிகளவிலான வளங்களை ஒதுக்கீடுசெய்வதன் மூலம் ஆர்வலர்கள் இலங்கையின் நிதியியல் முறைமையின் நேர்மையையும் உறுதிப்பாட்டையும் பாதுகாக்கலாம். மேலும், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட்ட நிறுவனங்கள் பிந்திய தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டில் கண்டறியப்பட்டவைகளை தமது நிறுவனம்சார்ந்த இடர்நேர்வு மதிப்பீடுகளினுள் ஒருங்கிணைக்குமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

இத்தேசிய முயற்சிக்கு பங்களிப்பினை வழங்கிய அனைத்து அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கும் நிதியியல் உளவறிதல் பிரிவு அதன் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றது.